கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். பால் கமிஷனின் பரிந்துரை என்ன? வன்முறை காரணமாக சுப்பிரமணிய பிள்ளை இறந்திருக்கலாம், எனவே, இதைப் பற்றி மாநில சி.ஐ.டி. என்ற தனி அமைப்பின் மூலம் புலன் விசாரணை செய்ய வேண்டுமென்பதுதான். இந்தக் கமிஷனுடைய பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டது. சி.ஐ.டி. போலீசைக் கொண்டு, பொது விசாரணை நடத்துவதற்கான உத்தரவினை, அறிக்கை கிடைத்த ஒரு மாதத்தில் அரசு போட்டிருக்கிறது. ஆதலால், பால் கமிஷன் அறிக்கையின் பிரதான சிபார்சை அரசு ஏற்றுக் கொண்டது. நிராகரிக்கவில்லை.

அடிப்படை சிபார்சு என்னவென்றால், அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டுமென்பது தான். அறங்காவலர் பதவியை நீக்குவது என்பது இந்து சமய அறக்கட்டளை 53வது பிரிவின்படி அதல் குறிப்பிட்ட காரணங்கள் ஏதேனும் ஒன்றிருக்க வேண்டும் என்பதை பால் கமிஷன் அறிக்கை தெளிவாக்குகிறது. கலைக்க வேண்டுமென்று தொடங்கிய நீதிபதி பால் அவர்கள், கலைக்க முடியாததற்கான காரணங்களையும் சொல்கிறார். ஆனால், நீதிபதி பால் அவர்கள் எந்த ஒரு குற்றச்சாட்டையும், எந்த ஒரு தனி நபர் செய்திருக்கிறார் என்பதையும் சந்தேகத் திற்கு இடமில்லாமல் தெளிவாக்கவில்லை. ஆதலால், இந்த வன்முறையைச் செய்தது யார்? அவர்கள் பெயர் என்ன? என்பதை அவரால் தெளிவாகச் சொல்ல இயலவில்லை.

சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த கொடுமைகளை விசாரிக்க நீதிபதி எம். எம். இஸ்மாயில் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. சிறைக் கைதிகளை கொடுமைப்படுத்தியதாக மனோகரன் என்ற ஒரு சிறை அதிகாரி அப்படி செய்ததாக 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் தேதி தெளிவாகக் கூறினார். அதை வைத்து மனோகரன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அடுத்து, மனோகரன் ரிட் தாக்கல் செய்தார், அதன்மீது நீதிபதிகள் இராமானுஜம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு கட்சியிலிருந்து ஒருவர் மட்டும் பேசுவதாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதனால், நாளைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அமைச்சரவை சார்பாக ஒருவரும் பேசுவார்கள். எனவே, நீங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

(ஆ) விதி 31—ஐ தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒவ்வொரு நாளும் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடை அளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள பேரவை விதி 31 தளர்த்தப்பெற்று, நாளை, 13-2-1982 அன்று நீதிபதி திரு. பால் கமிஷன் பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மீதும் விவாதம் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]1982 பிப்ரவரி 12]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் நாளை காலை 9 மணிக்கு அவை தொடங்கி, 12 மணிக்கு முடிவடையும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் பகல் 12½ மணிக்கு சுவீடிஷ் பிரதமர் அவர்கள் சென்னைக்கு வருகை தருகின்ற காரணத்தால், குறிப்பிடத்தக்க பலரும், தலைவர்களும் அங்கே இருக்கவேண்டிய அவசியமிருப்பதால் இந்த முடிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

(அ) நீதிபதி பால் கமிஷன் அறிக்கை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (தொடர்ச்சி).

*திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற திரு. சுப்பிரமணியப் பிள்ளை கொலை மீது சி.ஜே.ஆர். பால் கமிஷன் அளித்த அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ளது, அதன்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற முன் வந்திருக்கிறேன்.

குறிப்பாக, இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்தவரையில், அந்த மரண சம்பவம் நடைபெற்றது பற்றி விசாரிப்பதற்காக நம்முடைய காவல் துறையாகயிருந்தாலும், அந்த வழக்கை நீதிபதி விசாரிக்கவேண்டுமென்று சொல்லி, அந்த நகரத்திலே இருக்கக்கூடிய மக்களும், நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும், தமிழகம் பூராவிலும் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்ட காரணத்தால், இந்த வழக்கை போலீஸ் துறையிடம் ஒப்படைத்தால் சரியான நீதி கிடைக்காது என்ற காரணத்தால்- போலீஸ் துறைமீது இன்றைக்கு மக்களுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தினால், ஒரு நியாயமான, நேர்மையான முடிவிற்கு வரவேண்டுமென்ற அடிப்படையில், இந்த வழக்கின்மீது விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.

[முற்பகல் 10.30]

ஆனால், இந்த விசாரணைக் கமிஷன் உயநீதிமன்ற நீதிபதி அவர்களின் பரிந்துரையின் பேரில் தான் ஜே. சி. ஆர், பால் அவர்கள் இந்த அரசு நியமித்திருக்கவேண்டுமென்று கருதுகிறேன். இந்தக் கமிஷனைப் பொறுத்தமட்டில் தெளிவாக நீங்கள் இங்கே விளக்கியிருக்கிறீர்கள். திருச்செந்தூர் தேவஸ்தானத்தில் இருக்கக் கூடிய அந்த ஊழியர் மட்டுமல்லாமல் தமிழகம் பூராவிலும் இருக்கக் கூடிய அரசு ஊழியர்கள் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதால் மிகப் பெரிய போராட்டங்களை ஆரம்பித்து